**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.34 of 2021**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தெய்வீகராஜன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present.)**

**Dated.26.10.2023.**

**முதல் விசாரணை**

நான் கல்லகத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜெயபாலை எனக்கு தெரியும். அ.சா.1, 2 யை எனக்கு தெரியும். கடந்த 03.01.2021ம் தேதி கல்லகத்தில் உள்ள ரயில்வேகேட்டில் சாமான்கள் வாங்குவதற்காக எனது இருசக்கர வாகனத்தில் சென்று சாமான்கள் வாங்கிவிட்டு திரும்ப திருச்சி–அரியலூர் செல்லும் சாலையில் மதியம் 3.45 மணியளவில் சந்தனமேரி சோலை வயல் அருகே எனக்கு முன்பாக அசோக் லைலாண்ட் லாரியானது சென்று கொண்டிருந்தது. எங்களுக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் ஜெயபால் என்பவர் வந்து கொண்டிருந்தார், லாரியானது அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் சென்று ஜெயபால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து நடைபெற்றது. நானும், அ.சா.1, அ.சா.2ம் ஜெயபாலை தூக்கி பார்த்த போது அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவருக்கு வலது கண் மேலேயும், கை, கால் ஆகிய இடங்களிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் TN 51 AK 9484 ஆகும். இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 1494 ஆகும். விபத்து ஏற்படுத்திய லாரியை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தவர். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். போலிசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)-</u> இல்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2023.10.26 19:38:21 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.34 of 2021**

**Prosecution Witness : PW4**

**Name** : சௌந்தராஜன் **Caste** :

**Father's Name** : தனசிங்கு **Calling** :

**Village** : **Religion** :

**Taluk** : **Age** :

**(Accused present.)**

**Dated.26.10.2023.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பங்குடியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜெயபாலை எனக்கு தெரியும். அ.சா.1, 2 யை எனக்கு தெரியும். கடந்த 03.01.2021 ம் தேதி அ.சா.1, 2, ஜெயபால் ஆகியோர் திருச்சி–அரியலூர் செல்லும் சாலையில் உள்ள கல்லகம் அருகில் உள்ள வயலுக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு ஜெயபால் தனியாக ஒரு இருசக்கர வாகனத்திலும், அ.சா.1, 2 ஒரு இருசக்கர வாகனத்திலும் வந்தார்கள். அ.சா.1, 2 க்கு முன்பாக ஜெயபால் இருசக்கர வாகனத்தில் திருச்சி–அரியலூர் செல்லும் சாலையில் மதியம் 3.45 மணியளவில் அங்குள்ள சோலை வயல் அருகே வந்து கொண்டிருந்த போது ஜெயபாலுக்கு எதிரே வந்த லாரியானது அதிவேகமாக வந்து ஜெயபால் சென்ற இருசக்கர வாகனத்தில் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 நேரடியாக சொன்னதின் பேரில் எனக்கு தெரியும். சம்பவம் கேள்விபட்டு இலால்குடி அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது ஜெயபாலுக்கு

கண்ணுக்கு மேல் பகுதியிலும், கை, கால் ஆகிய இடங்களிலும் காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் இருந்தார். அதன் மறுநாள் இலால்குடி அரசு மருத்துவமனை சென்ற போது பிரேத விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)- இல்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2023.10.26 19:38:31 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 34 of 2021**

**Prosecution Witness : PW5**

**Name** : சவரிராஜ் **Caste** :

**Father's Name** : சின்னப்பன் **Calling** :

**Village** : **Religion** :

**Taluk** : **Age** :

**(Accused present.)**

**Dated.26.10.2023.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டத்தில் உள்ள கோ.குடியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜெயபால் என்னுடைய மைத்துனர் ஆவார். கடந்த 03.01.2021ம் தேதி ஜெயபால், அ.சா.1, 2 ஆகியோர் காணிக்கைபுரத்தில் அருகில் உள்ள வயலுக்கு சென்றுவிட்டு திரும்ப ஜெயபால் தனியாக இருசக்கர வாகனத்திலும், அவருக்கு பின்னால் அ.சா.1, 2 தனியாக ஒரு இருசக்கர வாகனத்திலும் அரியலூர்–திருச்சி செல்லும் சாலையில் சந்தனமேரி சோலை வயல் அருகே ஜெயபால் வந்து கொண்டிருந்த போது மதியம் 3.15 மணியளவில் ஜெயபாலுக்கு எதிர் திசையில் வந்த அசோக் லைலாண்ட் லாரியானது அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் வந்து ஜெயபால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது உறவினர்கள் போன் மூலமாக தகவல் தெரிவித்தனர், சம்பவம் நடைபெறும் போது நான் எனது ஊரில் இருந்தேன். சம்பவம் கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு நான் சென்ற

போது ஜெயபாலை இலால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். அதன் பிறகு இலால்குடி அரசு மருத்துவமனை சென்று ஜெயபாலை பார்த்த போது இடதுபக்க கண், கை, கால், தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் இருந்தார். மறுநாள் 04.01.2021 ம் தேதி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)-</u>இல்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2023.10.26 19:38:52 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 34 of 2021**

**Prosecution Witness : PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சகாயராஜ் | **Caste** | : |
| **Father's Name** | : ஜெகநாதன் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present.)**

**Dated.26.10.2023.**

**முதல் விசாரணை**

நான் காணிக்கைபுரத்தில் வசித்து வந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜெயபால் என்னுடைய அண்ணன் ஆவார். கடந்த 03.01.2021ம் தேதி ஜெயபால், அ.சா.1, 2 ஆகியோர் காணிக்கைபுரத்தில் அருகில் உள்ள வயலுக்கு சென்றுவிட்டு திரும்ப ஜெயபால் தனியாக இருசக்கர வாகனத்திலும், அவருக்கு பின்னால் அ.சா.1, 2 தனியாக ஒரு இருசக்கர வாகனத்திலும் அரியலூர்–திருச்சி செல்லும் சாலையில் ஜெயபால் வந்து கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டதாக எனக்கு ஊரில் உள்ளவர்கள் சொன்னதின் பேரில் தெரிந்து கொண்டேன். சம்பவம் கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது ஜெயபாலை இலால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். அதன் பிறகு இலால்குடி அரசு மருத்துவமனை சென்று ஜெயபாலை பார்த்த போது இடதுபக்க கண், கை, கால், தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு

இறந்த நிலையில் இருந்தார். மறுநாள் 04.01.2021ம் தேதி போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)-இல்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2023.10.26 19:39:01 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 34 of 2021**

**Prosecution Witness : PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ஜோதிபாஸ்** | **Caste** | **:** |
| **Father's Name** | **: பன்னீர்செல்வம்** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |

**(Accused present.)**

**Dated.26.10.2023.**

**முதல் விசாரணை**

நான் கல்லகத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 03.01.2021ம் தேதி மாலை 6.45 மணியளவில் நானும், சூர்யா என்பவரும் திருச்சி–அரியலூர் செல்லும் சாலையில் சந்தனமேரி கொல்லை அருகே சென்று கொண்டிருந்த போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர், அந்த பார்வை மகஜரில் நானும் சூர்யா என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)–இல்லை.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2023.10.26 19:39:15 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. CC.No. 34 of 2021**

**Prosecution Witness : PW8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சூர்யா | **Caste** | : |
| **Father's Name** | : ஜெயபால் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present.)**

**Dated.26.10.2023.**

**முதல் விசாரணை**

நான் கல்லகத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 03.01.2021ம் தேதி மாலை 6.45 மணியளவில் நானும், ஜோதிபாஸ் என்பவரும் அரியலூர் செல்லும் சாலையில் சந்தனமேரி கொல்லை அருகே சென்று கொண்டிருந்த போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர், அந்த பார்வை மகஜரில் நானும் ஜோதிபாஸ் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)–இல்லை.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2023.10.26 19:39:31 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.